இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 03-08-2025

# கடம்பூர் ராஜீ கக்கிய உண்மை!

“1999 ஆம் ஆண்டு சுப்பிரமணிய சுவாமியின் தவறான வழிகாட்டுதலால் பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்து பெரும் வரலாற்றுப் பிழையைச் செய்துவிட்டோம்” - என்று ஜெயலலிதா எடுத்த அன்றைய நிலைப்பாட்டை விமர்சித்துப் பேசி இருக்கிறார் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜீ.

‘நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை’, ‘இந்த அர்த்தத்தில் சொல்லவில்லை’ என்று அவர் மழுப்பினாலும், அவருக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் ‘சங்கி’ முழித்துவிட்டது என்பதே உண்மையாகும். ஜெயலலிதாவையே விமர்சிக்கும் நிலைக்கு பா.ஜ.க. பாசம், பழனிசாமி கூட்டத்துக்கு அதிகமாகி வருகிறது.

திராவிடம், பேரறிஞர் அண்ணா ஆகிய பெயர்களுக்கு இழுக்கு வரும் போதெல்லாம் வாய்மூடிக் கிடந்தவர் பழனிசாமி. ‘திராவிடம்’ என்பதை விமர்சித்தார் ஆளுநர் ரவி. இது பற்றி நிருபர்கள் கேட்டபோது, ‘எனக்குப் புராணம் எல்லாம் தெரியாதுங்க’ என்று பதில் சிரிப்பு சிரித்தார் பழனிசாமி. பெரியாரையும் அண்ணாவையும் திராவிடத்தையும் கொச்சைப்படுத்தி மதுரையில் ஒரு மாநாட்டில் காட்சிப்படம் ஒளிபரப்பினார்கள். அந்த மாநாட்டுக்கு தனது அமைச்சரவையில் இருந்த கொத்தடிமைகள் நான்கு பேரை அனுப்பி வைத்தார் பழனிசாமி. இந்தித் திணிப்பை நியாயப்படுத்தி உள்துறை அமைச்சர் அமித்ஷா ஒரு கருத்தைச் சொன்னார். ‘அது அவரின் சொந்தக் கருத்து’ என்று பதில் சொன்னார் பழனிசாமி. இப்படி மொத்தமாக திராவிட இயக்கக் கொள்கைகளைப் பலியிட்டு வந்தார் பழனிசாமி.

பழனிசாமியை விட தான் ‘பெரிய சங்கி’ என்பதை வேலுமணி மெய்ப்பித்து வருகிறார். அதற்கு தானும் சளைத்தவனல்ல என்று காட்டத் தொடங்கி இருக்கிறார் கடம்பூர் ராஜீ. பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்து பெரும் பிழையைச் செய்தாராம் ஜெயலலிதா. 26 ஆண்டுகள் கழித்து கடம்பூர் ராஜீ இதைக் கண்டுபிடித்திருக்கிறார்.

1999 ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்தார் ஜெயலலிதா. அது ஏதோ அவசரத்தில் அவர் எடுத்த முடிவல்ல என்பதை பின்னர் ஒரு கூட்டத்தில் பேசும் போது, அதனை உறுதி செய்து பேசினார் ஜெயலலிதா.

“முன்பு ஒரு தவறு செய்து விட்டேன். பி.ஜே.பி.யோடு தேர்தல் கூட்டணி வைத்துக் கொண்டேன். நான் செய்த தவறை ஒப்புக் கொள்ளும் தைரியம், துணிச்சல் எனக்கு என்றைக்கும் உண்டு. அந்தத்தவறுக்குப்பரிகாரமாகத்தான்நானேபி.ஜே.பி. ஆட்சியைக் கவிழ்த்தேன். இனி எந்தக் காலத்திலும் பி.ஜே.பி.யோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணி வைத்துக் கொள்ளாது” - இதுதான் ஜெயலலிதா சொன்னது ஆகும்.

வரலாற்றுப் பிழை அல்ல, தன்னைப் பொறுத்தவரையில் இதுதான் நிலைப்பாடு என்பதில் ஜெயலலிதா உறுதியாக இருந்தார். ‘மோடியா? லேடியா?’ என்று கேட்டவர் ஜெயலலிதா. ‘குஜராத் மாடலை விட, அ.தி.மு.க. ஆட்சியே சிறப்பானது’ என்றார் ஜெயலலிதா. அதேபோல் ஜெயலலிதா ஆட்சியை கடுமையாக விமர்சித்தார் பிரதமர் மோடி.

**2016 சட்டமன்றத் தேர்தலின் போது ஜெயலலிதாவுக்கு எதிராகத்தான் பிரதமர் மோடி பேசினார். “பா.ஜ.க.வுக்கு அனைவரும் வாக்களியுங்கள். ஒவ்வொரு முறையும் அம்மாவிடம் (ஜெயலலிதா) கோபித்துக் கொண்டு அய்யாவுக்கு (கலைஞர்) வாக்களிப்பீர்கள். அல்லது அய்யாவிடம் கோபித்துக் கொண்டு அம்மாவுக்கு வாக்களிப்பீர்கள். மாற்று சக்தி இல்லை. ஒரு முறை கிணற்றில் விழுந்தால் அடுத்த முறை ஏரியில் விழுவீர்கள். இப்போது பா.ஜ.க. என்ற மாற்று சக்தி உங்களுக்குக் கிடைத்து விட்டது. இப்போதைய ஆட்சியில் (அ.தி.மு.க.) லஞ்ச லாவண்யம் தலைவிரித்தாடுகிறது. தமிழ்நாடே இதனால் பாதிக்கப்பட்டு விட்டது. லஞ்சம் வாங்குபவர்கள் (ஜெயலலிதா) கையில் ஆட்சி இருக்கிறது” என்று பேசினார் அன்றைய மோடி.**

**“இந்தியாவிலேயே மிகப்பெரிய ஊழல் ஆட்சி ஜெயலலிதா ஆட்சிதான்” என்று அமித்ஷா பேசினார். இதனை எல்லாம் பழனிசாமி அண்ட் கோ மறந்திருக்கலாம். மக்கள் மறக்கவில்லை.**

சம்பாதித்ததையும் சம்பந்தியையும் காப்பாற்றுவதற்குத்தான் பா.ஜ.க. பக்கம் சாய்ந்திருக்கிறார் பழனிசாமி. அவரே கேட்பது போல, ‘அவர் யாரோடு கூட்டணி வைத்தால் நமக்கு என்ன?’ அதற்காக, ஜெயலலிதாவையே தூக்கி எறியத் துணிந்ததுதான் கவனிக்கத்தக்கது. சசிகலாவுக்கு ஒழுங்காகக் கப்பம் கட்டியதால் முதலமைச்சர் நாற்காலியைப் பெற்ற பழனிசாமி, சசிகலா சிறைக்குப் போனதும் ‘நீ ஏன் உரிமை கொண்டாடுகிறாய்? உனக்கும் அ.தி.மு.க.வுக்கும் என்ன சம்பந்தம்? நீ எங்களுக்கு பதவி வாங்கித் தந்தாயா?’ என்று ஒருமையில் நாவடக்கம் இல்லாமல் சவடால் விட்டதையும் தமிழ்நாடு மறக்கவில்லை. நன்றிகெட்டதனம்தான் பழனிசாமியின் குணம் என்பதை நம்மைவிட அ.தி.மு.க.வினர் அதிகமாக அறிவார்கள்.

**பழனிசாமி இருக்கும் தைரியத்தில்தான் கடம்பூரார் உளறுகிறார். ஜெயலலிதா உயிரோடு இருக்கும் போது கடம்பூர் ராஜீ இதைச் சொல்லி இருந்தால் ஆடிட்டர் ராஜசேகருக்கும், தூத்துக்குடி ரமேசுக்கும் ஏற்பட்ட கதி தான் இவருக்கும் ஏற்பட்டிருக்கும் என்பதை இப்போது நினைவூட்டுவது தவறல்ல.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.8.2025) முகாம் அலுவலகத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் சந்தித்து, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர். இச்சந்திப்பையடுத்து, இதுகுறித்து வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், **“என் நலம் விசாரித்து அன்புகொண்டு பேசிய அண்ணன் வைகோ அவர்களுக்கு நன்றி!”** என்று குறிப்பிட்டுள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் திருவண்ணாமலையில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமானப் பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## திருவண்ணாமலையில் ரூ.37 கோடியில்

# 600 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் மினி ‘டைடல்’ பூங்கா!

## மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஆக.3-**

**தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் திருவண்ணாமலையில் ரூ.37 கோடி மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் திருவண்ணாமலையில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலக்கு நிர்ணயித்து, அதனை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, ஒன்றிய அரசின் 2024 - 25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2000-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது.

**‘அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி’** என்பதை முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 இலட்சம் சதுரடி கட்டுமான பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 இலட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்களை நிறுவ முதலமைச்சர் அவர்களால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இவற்றின் கட்டுமானப்பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

மேலும், 5.57 இலட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவில், 21தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, முதலமைச்சர் அவர்களால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களை மேலும் விரிவுபடுத்தும் வகையில், ஒசூரில் ரூ.400 கோடி செலவில் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இவை மட்டுமின்றி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும், டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, விழுப்புரம் மற்றும் திருப்பூர் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு 24.6.2022 அன்றும், வேலூர் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 18.02.2023 அன்றும், தூத்துக்குடி, தஞ்சாவூர், மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு 19.5.2023 அன்றும் முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அவற்றில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்று விழுப்புரம் மினி டைடல் பூங்கா 17.02.2024 அன்றும், தஞ்சாவூர் மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் 23.09.2024 அன்றும், தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 29.12.2024 அன்றும் முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டன.

திருப்பூர், வேலூர் மற்றும் காரைக்குடி மினி டைடல் பூங்காக் களின் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவை விரைவில் செயல்பட துவங்கும். மேலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான வடிவமைப்பு பணிகள் முடிவுற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, திருவண்ணாமலையில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் அப்பகுதிகளில் வசித்து வரும் பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்கள் வசித்துவரும் மாவட்டங்களிலேயே தங்கி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதுடன், அப்பகுதிகள் சமூகபொருளாதார வளர்ச்சியடையவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் மற்றும் பலர் உள்ளனர்.